தமிழே ஆட்சிமொழி! தமிழே கல்வி மொழி! தமிழே தொடர்பு மொழி!

பாவாணர் வழியில் பைந்தமிழ் வளர்ப்போம்!



# உலகத் தாய்மொழி நாளில் உலகத் தமிழ்க் கழகம் நடத்தும்

# தமிழ் உரிமை அறப்போராட்டம்

---

இடம் : **புலவர் இறைக்குருவனார் மேடை**
விருந்தினர் இல்லம் அருகில், சேப்பாக்கம், சென்னை - 5

நாள் : திருவள்ளுவர் ஆண்டு 2044 கும்பம் 9 [21.2.2013]
வியாழக்கிழமை

நேரம் : காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை

---

தலைமை : பேராசிரியர் **ம.இலெ. தங்கப்பா**
நெறியாளர், உலகத் தமிழ்க் கழகம்

தொடக்க உரை : பேராசிரியர் **கு. பூங்காவனம்**
நெறியாளர், உலகத் தமிழ்க் கழகம்

**சிறப்புரை**

பேராசிரியர் **பொற்கோ,**
மேனாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்

பேராசிரியர் **இரா. இளவரசு,** தலைவர், தமிழியக்கம்

பேராசிரியர் **ந. தெய்வசுந்தரம்,**
மேனாள் தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்

**நிறைவுரை**

திரு. **பழ. நெடுமாறன்,**
தலைவர், உலகத் தமிழர் பேரமைப்பு


நடராசன்


தாலமுத்து


அரங்கநாதன்


சிவலிங்கம்


சின்னச்சாமி


இராசேந்திரன்

---


## உலகத் தமிழ்க் கழகம்

726, பாவாணர் தெரு, முல்லை நகர், மேற்குத் தாம்பரம், சென்னை 600 045
9444203349/9944478763/9500318191/9445207501/9443284903

# அறப்போராட்ட அமர்வுகள்

## தமிழே ஆட்சிமொழி

புலவர் **கி.த. பச்சையப்பன்**
தமிழ் உரிமைக் கூட்டமைப்பு

திரு. **திருமுருகன் காந்தி,** மே 17 இயக்கம்

திரு. **தமிழ்நேயன்**
தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்

திரு. **இறையழகன்,** மறைமலையடிகள் மன்றம்

திரு. **தியாகு,** தமிழ்த்தேச விடுதலை இயக்கம்

## தமிழ்க் கல்வி

பேராசிரியர் **இரா. மதிவாணன்,**
செ.சொ.பி. அகரமுதலித் திட்ட மேனாள் இயக்குநர்

பேராசிரியர் **பா. இறையரசன்,** எழுத்தேணி அறக்கட்டளை

பேராசிரியர் **கு. அரசேந்திரன்**

முனைவர் **மலையமான்**

பேராசிரியர் **ப. அருளி**

முனைவர் **இரா. கு. ஆல்துரை**

முனைவர் **மு. கண்ணன்**

## தமிழே கல்விமொழி

பேராசிரியர் **பிரபா கல்விமணி**
மக்கள் கல்வி இயக்கம்

திரு. **பிரின்சு கசேந்திரபாபு**
பொதுப்பள்ளிக்கான மாநில மேடை

திரு. **செயப்பிரகாசு நாராயணன்**
தமிழர் குடியரசு முன்னணி

திரு. **சோழநம்பியார்,** தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம்

திரு. **இராசேந்திரசோழன்,** ஆசிரியர், மண்மொழி

திரு. **காஞ்சி அமுதன்**
தமிழக இளைஞர் எழுச்சி இயக்கம்

திரு. **செ.ப. முத்தமிழ்மணி,** தமிழர் தேசிய இயக்கம்

திரு. **இளங்கோ,** திருவள்ளுவர் மன்றம்

## தமிழ்வழிப்பள்ளி

திருவாட்டி **இறை. பொற்கொடி**
திருவள்ளுவர் தமிழ்வழிப் பள்ளி

திரு. **வெற்றிச்செழியன்,** பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளி

திரு. **சு. முத்து**
பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழ்வழிப் பள்ளி

திருவாட்டி **தமிழ்க்கண்மணி,**
பாவாணர் தமிழ்வழிப் பள்ளி

## தமிழே வழக்காடுமொழி

வழக்குரைஞர் **கலைமணி**

வழக்குரைஞர் **புகழேந்தி**

வழக்குரைஞர் **பாவேந்தன்**

வழக்குரைஞர் **குப்பன்**

வழக்குரைஞர் **பகத்சிங்**

வழக்குரைஞர் **பாரி**

வழக்குரைஞர் **அங்கயற்கண்ணி**

வழக்குரைஞர் **சுசாதா**

## இதழாளர் கருத்துரை

திரு. **மா. பூங்குன்றன்** - ஆசிரியர், தென்மொழி

முனைவர் **அருகோ,** ஆசிரியர், எழுகதிர்

திருவாட்டி **தமிழ்ச்செல்வி** - ஆசிரியர், வெல்லும் தூயதமிழ்

பாவலர் **பாவலர் இலக்கியன்** - துணை ஆசிரியர், தெளிதமிழ்

திரு. **இளங்கோ** - ஆசிரியர், நற்றமிழ்

திரு. **தமிழாலயன்** ஆசிரியர், தேமதுரத் தமிழோசை

புலவர் **நா. இளமாறன்,** ஆசிரியர், தமிழறம்

திருவாட்டி **தேன்மொழி** - ஆசிரியர், தழல்

திரு. **குணத்தொகையன்** - ஆசிரியர், மாணவர் களம்

திரு. **வேலுமணி** - ஆசிரியர், தமிழர் எழுச்சி

திரு. **ந.வி. தமிழேந்தி** - ஆசிரியர், தமிழ்க்கொடி

## அமைப்பாளர் கருத்துரை

திரு. **ஓரிசா பாலு,** கடல் ஆய்வு நிறுவனம்

திரு. **தென்னன் மெய்ம்மன்,** மரபுக் கட்டடக்கலை

திரு. **ச. துரைமுருகன்,** தென்பொதிகைத் தமிழ்ச்சங்கம்

திரு. **எழில்.சோம. பொன்னுசாமி,** தமிழர் நலக்கழகம்

திரு. **உதயன்,** தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி

திரு. **மறை.தி. தாயுமானவன்,** மறைமலையடிகள் கல்வி அறக்கட்டளை

திரு. **அ. பத்மநாபன்,** தமிழின உணர்வாளர் கூட்டமைப்பு

திரு. **செந்தமிழ்க்கோ,** தமிழ் இயக்கம், வேலூர்

திரு. **இரா. பத்மநாபன்,** முத்தமிழ் வளர்ச்சிப் பேரவை

புலவர் **இரத்தினவேலன்,** பாவேந்தர் பாசறை

திரு. **மார்க்சு இளவேனில்,** மக்கள் வாழ்வுரிமைப் போராட்ட இயக்கம்

திரு. **தெய்வமணி,** அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம்

திருவாட்டி **இசைமொழி,** தமிழகப் பெண்கள் செயற்களம்

திரு. **செந்தமிழ்க்குமரன்,** தமிழ்மக்கள் தொழிலாளர் முன்னணி

திரு. **க. கந்தசாமி,** தொழிலாளர் சீரமைப்பு இயக்கம்

திரு. **புகழேந்தி,** தமிழர் கழகம்

## பங்கேற்போர்

முனைவர் **ந. அரணமுறுவல்**
தலைவர், உலகத் தமிழ்க் கழகம்

புலவர் **கதிர். முத்தையன்**
துணைத் தலைவர், உலகத் தமிழ்க் கழகம்

திரு. **தா. அன்புவாணன் வெற்றிச்செல்வி**
பொதுச் செயலாளர், உ.த.க.

திரு. **கி. வெற்றிச்செல்வன்,**
துணைப் பொதுச் செயலாளர்,உ.த.க.

புலவர் **ஆ. நெடுஞ்சேரலாதன்**
பொருளாளர், உ.த.க.

திரு. **சி.பூ மணி,**
கருநாடக மாநில அமைப்பாளர்

புலவர் **கோ. தமிழுலகன்**
புதுவை மாநில அமைப்பாளர்

## மாவட்ட அமைப்பாளர்கள்

திரு. **பா. இறையெழிலன்,** சென்னை மாவட்டம்

புலவர் **கரு. நடவரசன்,** கடலூர் மாவட்டம்

பாவலர் **ஆடல்,** பெரம்பலூர் மாவட்டம்

திரு. **அ. செல்லத்துரை,** திருநெல்வேலி மாவட்டம்

திரு. **செ.சி. இளந்திரையன்,** சேலம் மாவட்டம்

திரு. சொ.செ. **இளங்கோவன்**
திருவண்ணாமலை மாவட்டம்

திரு. **ம.ப, வேல்முருகன்,** காஞ்சிபுரம் மாவட்டம்

திரு. **சி.பா. தமிழ்ச்சோலை,** தஞ்சாவூர் மாவட்டம்

திரு. **மு.நா.பா. தமிழ்வாணன்,** கோவை மாவட்டம்

திரு. புலியூர் **தமிழன்பன்,** விழுப்புரம் மாவட்டம்

திரு. **கே. விழியரசு,** வேலூர் மாவட்டம்

திரு. **முருக முடியரசு,** திருவள்ளூர் மாவட்டம்

## கிளைப்பொறுப்பாளர்கள்

திரு. **சு. கலைச்செல்வன்,** சென்னை

திரு. **மு. அரசெழிலன்,** சென்னை

திரு. **இரா. இளவழகன்,**சென்னை

புதுவை **வேலா,** புதுச்சேரி

திரு. **கி.சி. தென்னவன்,** வெங்காலூர்

திரு. **அன்பிற்கரசு,** தங்கவயல்

திரு. **பா. இளங்கோ,**சென்னை

புலவர் **பொன்னையன்,** இராமநத்தம்

புலவர் **இளஞ்சித்திரன்,** கள்ளக்குறிச்சி

திரு. **பொற்செழியன்,** திருநெல்வேலி

திரு. **செ. மணிப்பாவாணர்,** வடக்கு அழகுநாச்சியாபுரம்

திரு. **ஆடலரசு,** சேலம்

திரு. **த. மெய்யன்பன்,** சிவகாசி

பாவலர் **பூவையார்,** கும்பக்கோணம்

திரு. **இளஞ்சேட்சென்னி,** கும்பக்கோணம்

திரு. **திருமாலன்பன்,** கும்பக்கோணம்

திரு. **செ. கதிரொளி,** நெய்வேலி

திரு. **கோ. கண்ணன்,** நெய்வேலி

திரு. **உலோ. கரிகாலன்,** நெய்வேலி

திரு. **முருகையன்,** சிவகாசி

திரு. **செந்தமிழன்,** சிவகாசி

பாவலர் **குப்பன்,** திருவண்ணாமலை

புலவர் **புயல்மொழியார்,** திருவண்ணாமலை

திரு. **தனியவன்,** காஞ்சிபுரம்

மரு. **நா. சண்முகநாதன்,** திருப்பூர்

திரு. அ.ம.பெ. காவலர் **தமிழ்ச்செல்வன்,** குழித்தலை

திரு. **வ. அண்ணாமலை,** திருப்பெரும்புதூர்

திரு. **மா.கா. வெற்றிச்செல்வன்,** சுரைக்காய்ப்பேட்டை

பாவலர் **தமிழியலன்,** கடலூர்

பாவலர் **வே. தமிழ்மாணிக்கம்,** கோவை

## புதுவை மாநில அன்பர்கள்

திரு. **அரங்க. நடராசன்**

முனைவர் **க. தமிழமல்லன்,** தனித்தமிழ் இயக்கம்

திரு. **வி.திருவேங்கடம்,** தமிழ்வளர்ச்சி நடவடிக்கைக்குழு

திரு. **பெ.பராங்குசம்,** இலக்கியப் பொழில் இலக்கிய மன்றம்

திரு. **இரா. அழகிரி,** தமிழர் தேசிய இயக்கம், புதுச்சேரி

திரு. **இரா. இளமுருகன்**
இலக்கணச் சுடர் முனைவர் இரா. திருமுருகனார் அறக்கட்டளை

திரு. **அழகர்,** தமிழர் களம்

திரு. **அரிமாப் பண்டியன்,** தனித் தமிழ்க் கழகம்

திரு. **மு. வெற்றிவேல்,** மக்கள் நல்வாழ்வு நற்பணி மன்றம்

திரு. **பொ. தாமோதரன்,** புரட்சிப் பாவலர் இலக்கியப் பாசறை

திரு. **ந.மு. தமிழ்மணி,** செந்தமிழ் இயக்கம்

திரு. **பெ. வேணுகோபால்,** உ.த.க. பாகூர்

திரு. **சிவஞானம்,** உ.த.க. பூரணாங்குப்பம்

திரு. **தூ. சடகோபன்,** பெரியார் அறிவியல் பேரவை

திரு. **தரும. இரத்தினவேல்,**
பகுத்தறிவுப் பாசறை இளைஞர் நற்பணி மனறம்

# தமிழ் காக்க ஒன்றுபடுவோம்!

தமிழைத் துறைதோறும் துறைதோறும் தூய்மையாய் வளர்ப்பதே உலகத் தமிழ்க் கழகத்தின் பணி. இன்றைய தமிழின்நிலை உண்மைத் தமிழர்களின் உள்ளத்தை வாட்டி வதைத்துக்கொண்டுள்ளது. இதனாலேயே உலகத் தமிழ்க் கழகம் தமிழ்க்கல்வி பற்றியும் தமிழ்வழிக்கல்வி பற்றியும் உரத்துப் பேசுகிறது. தமிழ்க்கல்வி படித்தவர்களுக்கும் தமிழ்வழிக் கல்வி படித்தவர்களுக்கும் மட்டுமே தமிழ்நாட்டில் வேலை தர வேண்டும் என்கிறது.

தமிழ் 50 ஆண்டுகளில் அழிந்துபோகக்கூடிய மொழிகளின் பட்டியலில் இருக்கிறது என்றவுடனே நம் நெஞ்சம் பதைக்கிறது. அப்படியெல்லாம் ஆகிவிடாது என்று உள்மனம் ஆறுதல் சொல்கிறது. ஆனால், உண்மையோ உலக நாடுகள் அவை சொன்னதுபோல்தான் உள்ளது.

ஒரு மொழி பேச்சில், எழுத்தில், கல்வியில், ஆட்சியில், வழக்கில், வழிபாட்டில் என்று எல்லாத் துறைகளிலும் புழங்க வேண்டும். தமிழ்நாட்டில் தமிழின் நிலை அப்படி இருக்கிறதா என்று எண்ணிப்பாருங்கள்.

## உலகத் தாய்மொழி நாள்

பிப்பிரவரி 21 உலகத் தாய்மொழி நாள். ஏன்? வங்காளத்தேசத்தின்மீது - அன்றைய கிழக்கு வங்காளத்தின்மீது பாக்கித்தான் உருது மொழியைத் திணித்திருந்தது. அன்றைக்குக் கிழக்கு வங்காளத்தில் உருது பேசுகிறவர்களின் எண்ணிக்கை 7.5 விழுக்காட்டினர்தான். ஆனால் அதுதான் ஆட்சிமொழி. டாக்காப் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் தாய்மொழியான வங்காள மொழியை ஆட்சிமொழியாக்கப் போராடினார்கள். பாக்கித்தான் அரசு வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டது. 1952ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 21ஆம் நாள் நடந்த உருது எதிர்ப்புப் போராட்டத்தில் அப்துசு சலாம், இரபிக் உத்தின் அகமது, அப்துல் பார்க்கத்து, அப்துல் சபார் ஆகிய 4 மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானார்கள்.

வங்காள மொழிப்போர் மறவர்களுக்குத் துப்பாக்கிச் சூடு நடந்த வளாகத்திலேயே 'சகித் மினார்' என்ற பெயரில் நினைவுத் தூண் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நாளைத்தான் உலகத் தாய்மொழி நாளாக ஒன்றிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (யுனெசுகோ) 1999 பிப்பிரவரி 21ஆம் நாள் அறிவித்தது. 2000 ஆண்டுமுதல் உலகமே இந்த நாளை உலகத் தாய்மொழி நாளாகக் கொண்டாடுகிறது. 1972ஆம் ஆண்டு வங்காளத்தேசம் தனிநாடாக உருவானபிறகு உலக நாடுகளின் அவையில் தொடர்ந்து குரல் கொடுத்ததன் விளைவாக இது நிகழ்ந்தது.

## இந்தி எதிர்ப்புப் போர்

ஆனால், தமிழ்நாட்டின் நிலை என்ன? இந்தியை எதிர்த்து 1938இலிருந்து நாம் போராடிக் கொண்டுள்ளோம். நடராசன், தாலமுத்து 1938ஆம் ஆண்டு மொழிப் போரில் களப்பலியானார்கள். 1948இல் மீண்டும் போராட்டம். 1965இல் மூன்றாம் இந்தி எதிர்ப்புப் போர். உலகில் எங்கும் நடைபெறாத வகையில் தமிழ்மொழி காக்க இந்தியை எதிர்த்துத் தமிழ்நாடே களத்தில் நின்றது. கோடம்பாக்கம் அரங்கநாதன், கீழப்பழுவூர் சின்னச்சாமி, விராலிமலை சிவலிங்கம், மயிலாடுதுறை சாரங்கபாணி எனப் பலர் தம் தேக்குமர உடலைத் தீக்கிரையாக்கி 'உடல் மண்ணுக்கு; உயிர் தமிழுக்கு' என்று வீரமுழக்கமிட்டு உயிர் ஈகம் புரிந்தார்கள். அண்ணாமலைநகர் இராசேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள். இவர்கள் அனைவரும் இந்தியை எதிர்த்துத் தமிழைக் காக்கவே ஈகம் புரிந்தார்கள்.

நடந்தது என்ன? 1967இல் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. தமிழ் எல்லாத் துறைகளிலும் கோலோச்சுகிறதா? தொடர்ந்தும் திராவிடக் கட்சிகள்தானே ஆண்டுகொண்டுள்ளன.

1938இல் இந்தியைத் தமிழர்கள்மீது எந்த இராசாசி திணித்தாரோ அந்த இராசாசி இந்தி எதிர்ப்புப் போரில் இந்தியை எதிர்க்கும் அணிக்கு வந்துவிட்டார். அவர் வைத்த முழக்கம்தான் "இந்தி எப்போதும் வேண்டாம்; ஆங்கிலம் எப்போதும் வேண்டும்" (Hindi never; English ever)" என்பது. இதைத் திராவிடக் கட்சிகள் உயிர்க் கொள்கையாக உயர்த்திப் பிடித்துள்ளன.

## தமிழ் அழிக்கப்படுகிறது

இந்தியை எதிர்த்துத் தமிழர்கள் போராடியது தமிழைக் காப்பாற்ற; ஆங்கிலத்தைக் காப்பாற்ற இல்லை. ஆனால் திராவிடக் கட்சிகளால் ஆங்கிலம் காப்பாற்றப்படுகிறது; தமிழ் அழிக்கப்படுகிறது.

இந்த நிலையை மாற்ற வேண்டாமா? தமிழின் வளர்ச்சிபற்றிக் கணக்கெடுக்கும் நாளாக இந்த நாளைக் கொண்டாடுவோம். தமிழ்மொழியால் ஒன்றுபடுவோம். தமிழால் மட்டுமே நாம் ஒன்றுபட முடியும். தமிழ்மொழி, தமிழின, தமிழ்நாட்டு விடுதலையை வென்றெடுக்க முடியும்.

**வாருங்கள் தமிழர்களே! ஒன்றுபடுவோம்! வெற்றிபெறுவோம்!**